# அரசுப்பொதுத்தேர்வு – மார்ச் 2018

## மேனிலை முதலாண்டு பொதுத்தமிழ் - முதற்றாள்

**விடைக்குறிப்பு** மதிப்பெண்கள்: 90

முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, நா.ம.மே.பள்ளி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர்மாவட்டம்.

| | | |
|---|---|---|
| I | உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | 20 x 1 = 20 |
| 1 | ஆ) அரசுக்கணக்கர் | 1 |
| 2 | ஆ) பேகன் | 1 |
| 3 | இ) ஓரம்போகியார் | 1 |
| 4 | ஆ) உவமஉருபு | 1 |
| 5 | ஆ) திருக்குறள் | 1 |
| 6 | அ) பிறிதுமொழிதல் அணி | 1 |
| 7 | இ) அடையடுத்த கருவியாகுபெயர் | 1 |
| 8 | இ) நச்சினார்க்கினியர் | 1 |
| 9 | ஆ) செலவியற்காண்டம் | 1 |
| 10 | இ) சுந்தரம்பிள்ளை | 1 |
| 11 | அ) கடல் | 1 |
| 12 | ஆ) இரட்டைக்கிளவி | 1 |
| 13 | அ) 250 | 1 |
| 14 | ஆ) ஒரிசா | 1 |
| 15 | ஆ) காப்பு | 1 |
| 16 | இ) ந. கருணாநிதி | 1 |
| 17 | இ) கண்ணதாசன் | 1 |
| 18 | அ) திருநாவுக்கரசர் | 1 |
| 19 | இ) ஆண்டாள் | 1 |
| 20 | ஆ) வினைத்தொகை | 1 |
| II. | எவையேனும் ஏழனுக்கு மட்டும். (கட்டாய வினாவெண் 30) | 7 x 2 = 14 |
| 21 | * புறம் + நான்கு + நூறு. 400 அகவற்பாக்களைக்கொண்டது.<br>* கடவுள்வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடினார்.<br>* முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், சேனைத்தலைவர்கள், வீரர்கள், கடையெழுவள்ளல்கள், கடைச்சங்கப்புலவர்கள் எனப் பலருடைய வரலாற்றுக்குறிப்புகள், அக்காலத்துள்ளாருடைய நடை நன்கு புலப்படும்.<br>* இந்நூலின் சிலபாடல்களை அறிஞர் ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். | 2 |
| 22 | * தேவருள் ஒருவராய்த் தேவருலகில் சேர்ப்பது, அடக்கம் என்ற பண்பாகும். | 2 |
| 23 | * பிரித்து எழுதி, பகுபதவுறுப்பிலக்கணம்: 1. ஈன்ற 2. பணிதல் | 1 + 1 |
| 24 | * **யாகாவா** ராயினு நாகாக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | 2 |
| 25 | * பகுபத உறுப்பிலக்கணம்: 1. பாடினாள் 2. வெருவி | 1 + 1 |
| 26 | * சீவகசிந்தாமணி / நரிவிருத்தம். | 2 |
| 27 | * வெள்ளம் போன்றது தமிழர் கூட்டம், அது வீரம் நிறைந்த கூட்டம்<br>* உடலால் பலராய்க் காணப்பட்டாலும் உள்ளத்தால் ஒருவரே<br>* அவர்கள் அவ்வளவு ஒற்றுமை உடையவர்கள்<br>* அவர்களை வஞ்சித்துக் கெடுக்கும் எண்ணத்தோடு நெருங்க இயலாது என இவ்வுலகம் கலங்குமாறு ஒற்றுமையாய் வாழ்வதே தமிழர் செய்யத்தக்கது | 2 |
| 28 | * அழியாத பல நூல்கள், இசைநெறி போற்றும் கீர்த்தனங்கள்<br>* ஞானத்தச்சன், ஞானவுலா, ஆரணாதிந்தம், பல்வேறு கீர்த்தனங்கள் | 2 |
| 29 | * திருப்பாவை – வேதம் அனைத்திற்கும் வித்து<br>* நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தம் | 2 |



http://www.trbtnpsc.com/2018/03/11th-public-exam-march-2018-question-papers-and-answer-keys-download.html

| | | |
|---|---|---|
| | * பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்புக்கு ஆகி, பின் இருமடியாகுபெயர்<br>* திருப்பாவை அருளிய ஆண்டாள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் | |
| 30 | * அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை வியந்தான் விரைந்து **கெடும்** **(அல்லது)**<br>* உளவரை தூக்காத ஒப்புர வாண்மை வளவரை வல்லைக் **கெடும்** | 2 |
| **III.** | **எவையேனும் ஏழனுக்கு மட்டும். (கட்டாய வினாவெண் 40)** | **7 x 3 = 21** |
| 31 | * வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர்.<br>* பெற்றோர் - கேடிலியப்ப பிள்ளை, கெஜவல்லி அம்மையார்.<br>* விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசரிடம் கணக்கராகப் பணி.<br>* மட்டுவார்குழலி என்னும் மங்கையை மணந்து வாழ்ந்தார்.<br>* மௌனகுரு என்பாரிடம் உபதேசம்பெற்றுத் துறவுபூண்டவர். | 3 |
| 32 | * தான் செய்யக்கருதிய செயலின் வலிமை<br>* அதைச் செய்ய விரும்பும் தன் வலிமை<br>* அதற்கு ஊறுசெய்து விலக்கக்கூடிய பகைவனது வலிமை<br>* தனக்குத் துணையாவார், பகைவர்க்குத் துணையாவார் வலிமை | 3 |
| 33 | * ஒருவன் கொடுக்கும் முறையிலும், தன் பொருள் வைப்பின் அளவை அறிந்து அதற்கேற்பவே கொடுத்தல் வேண்டும்<br>* அவ்வாறு அளவறிந்து கொடுப்பதே தன் பொருளைக் காத்துக்கொள்ளும் முறையாகும் என் வள்ளுவர் உரைக்கிறார். | 3 |
| 34 | * **இடம்:** சீவகசிந்தாமணியில் உள்ள காந்தருவதத்தை இலம்பகத்தில் இத்தொடர் இடம்பெற்றுள்ளது.<br>* **பொருள்:** தத்தையின் தோழி வீணாபதி கொடுத்த நல்ல யாழை வாங்கி ஆராய்ந்த சீவகன், “இந்த யாழானது காந்தருவதத்தையின் குலம் முதலிய சிறந்த நலத்தைப்போல் மிகவும் உயர்ந்தது” என்றான்.<br>* **விளக்கம்:** யாழ்ப்போட்டியில் கலந்துகொண்ட சீவகன், குற்றமுள்ள யாழ்களைக் கண்டறிந்து கூறினான். இறுதியில் உறையுள் இருந்த நல்ல யாழைத் தத்தையின் தோழி வீணாபதி கொடுக்க வாங்கி, ஆராய்ந்து, “நங்கை நலத்தது இது” என்றான். | 3 |
| 35 | * மூன்று காண்டங்களையுடையது.<br>* விலாதத்துக் காண்டம், நுபுவ் வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் | 3 |
| 36 | * உலகில் எத்தனையோ பேர் பிறக்கின்றனர், எத்தனையோ பேர் இறக்கின்றனர்<br>* ஒரு உடம்பு தசை முதலிய பொருள்களால் ஆகி அழியும் தன்மையுடையது<br>* அத்தகைய இகழுடம்பு கொண்டு செய்த நற்செயல்களால் என்றும் அழியாது உலகில் நிலைத்து நிற்பது புகழுடம்பு.<br>* அப்புகழ் உடம்பினைப் பெறாதவர் பிறந்தார் எனப்படாதவர் ஆவர் | 3 |
| 37 | * அம்மையே! நாங்கள் வாழ்வதற்கு முதன்முதலில் இருப்பிடமாய் அமைந்தமலை ஏதன்மலையாகும்.<br>* ஆண்டவர் எங்களை முதலில் படைத்தது அந்த ஏதன்மலையில்தான்.<br>* இனிமையாய் வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற நான்குவகையான சூழலை அமைத்துக்கொடுத்தது அந்த ஏதன்மலையில்தான்.<br>* அழிவற்ற வாழ்வு அமைந்ததும் அந்த ஏதன்மலையில்தான்.<br>* சாத்தான் பொய்தனைக்கூறி எங்கள் அறிவைக் கெடுத்ததும்அம்மலையில்தான்.<br>* அதையறிந்து ஆண்டவர் எங்களைச் சாபமிட்டதும் அம்மலையில்தான்.<br>* எங்கள் தன்மைவேறுபட்டு நாங்கள் அம்மலையைவிட்டு வந்தபின்பு எங்களுக்குப் பெத்தலகேம் பெரியமலையாய் அமைந்தது. | 3 |

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2018/03/11th-public-exam-march-2018-question-papers-and-answer-keys-download.html

| | | |
|---|---|---|
| 38 | * தாள்தோறும் நெல்மணிகள்<br>* காளையின் கடும் உழைப்பு<br>* உழைத்தும் பயன்கிட்டாக் காளை<br>* உற்பத்தியைப் பெருக்குபவன் உழைப்பாளி<br>* உழைப்பில் பங்குபெறா உடைமையாளர்கள்<br>* உழைப்பவரைத் தடுக்கும் தளை | 3 |
| 39 | * போதிமர நிழலில் எல்லா உண்மைகளையும் உணர்ந்த புத்த மாமுனிவனே<br>* மக்கள் அனைவரும் தொழத்தக்கவகையில் மனம் ஒருமைப்பட்டு வாழ்வாராக<br>* நல்வினை தீவினை ஆகிய இருவினைக்கட்டு அகல வாழ்வாராக<br>* காமம், வெகுளி, மயக்கங்களாகிய முப்பகைகளையும் வென்று வாழ்வாராக<br>* அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பொருள்களை உணர்ந்து நீங்காதஇன்பத்தோடு நெடுங்காலம் வாழ்வாராக என்று உன்னை வணங்குவோம் | 3 |
| 40 | **அ) உறுமிடம்** – உறும் + இடம்<br>**விதி 1: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**<br>**ஆ) செறிவறிந்து** – செறிவு + அறிந்து<br>**விதி 1: உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்**<br>**யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி**<br>**விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** | 1½<br><br>1½ |
| **IV.** | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | **7 x 5 = 35** |
| 41 | **அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள்**<br>* அடக்கத்தால் எய்தும் நன்மை<br>* அடக்கமே ஆக்கம் தரும்<br>* அடக்கம் மேன்மையைத் தரும்<br>* அடக்கமுடையான் உயர்வு<br>* எல்லார்க்கும் பணிவு இன்றியமையாதது<br>* அடக்கம் ஏழு பிறப்புக்கும் உதவும்<br>* நாவடக்கம் இல்லாதவர் துன்புறுவர்<br>* நன்மையும் தீமையாய் முடியும்<br>* தீயினால் சுடுதலினும் தீது<br>* மன அடக்கத்தின் சிறப்பு | 5 |
| | **(அல்லது)**<br>**வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள்**<br>* நால்வகை வலிமைகளை ஆராய்க<br>* இயன்றதைச் செய்தால் இனிதே முடியம்<br>* வலியறியாதார் தோல்வியுறுவார்<br>* தற்பெருமை கொள்பவன் கெடுவான்<br>* மெலியார் பலர் கூடின் வலியவராவர்<br>* வெற்றியில் அளவுக்கு மீறி ஆசைப்படக்கூடாது<br>* பொருளைப் போற்றுதலும் வலியறிதலே<br>* வருவாய் அறிந்து அதற்கேற்பச் செலவுசெய்க<br>* அளவறிந்து வாழாதவன் அழிவான்<br>* வருவாய்க்கு ஏற்ப ஈதல் வேண்டும் | 5 |
| 42 | **வளைகளில் ஒன்றுமட்டும் அடைபடாதிருந்ததற்கான காரணம்**<br>* துளையினை அடைக்க போதிய துணி அபூபக்கரிடம் இல்லை<br>**அபூபக்கர் அதை அடைத்தவிதம்**<br>* மெதுவாய்க் காலை நீட்டி, தனது உள்ளங்காலினால் அத்துளையை அடைத்தார் | 5 |

www.Padasalai.Net



http://www.trbtnpsc.com/2018/03/11th-public-exam-march-2018-question-papers-and-answer-keys-download.html

| | | |
|---|---|---|
| | (அல்லது)<br>“முன்னோர் நொந்த புண்” என்று ஜீவகன் உரைத்தன<br>* தேவர்க்கு உவகைதரும் தீ……<br>* நாட்டுப்பற்றைக் கூறும்…….<br>* சுதந்தரமே சுவாசம்……<br>* வெற்றிமகள் அளித்த முத்திரை……<br>* யாசித்தேனும் பெறத்தக்கது……<br>* மெய்யான உடம்பு எது?……<br>* சமத்துவம் உண்டாவது எந்நாளோ? | 5 |
| 43 | ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுதல்<br>* மென்மையான விரல்கள் வரண்டுவிடாமல் செங்கீரை ஆடியருள்க<br>* உன் மென்மையான குரல் குன்றாமல் செங்கீரை ஆடியருள்க<br>* தாமரைமலர் போன்ற கண்கள் சிவந்துவிடாமல் செங்கீரை ஆடியருள்க<br>* கண்ணீர்வழிந்து கருத்தஉருவமாய்க் காட்டாதபடி செங்கீரை ஆடியருள்க<br>* ஒருகாலை ஊன்றி எழுந்து, இரு கைகளை ஒருசேர நிலத்தின்மீது பதித்து, தலைநிமிர்ந்து, முகம் அசைய அசைந்து, இனிமையாய்ச் செங்கீரை ஆடியருள்க<br>* பழைமையான வைத்தீசுவரன் கோவிலில் வீற்றிருக்கும் முத்துக்குமாரசுவாமியே செங்கீரை ஆடியருள்க. | 5 |
| | (அல்லது)<br>பாடாண்திணை<br>* திணை இலக்கணம்<br>* சான்றுச்செய்யுள்<br>* திணை விளக்கம் | 5 |
| 44 | உவமையணி:<br>* அணி இலக்கணம்<br>* சான்றுச்செய்யுள்<br>அணி விளக்கம் | 5 |
| | (அல்லது)<br>வேற்றுமையணி:<br>* அணி இலக்கணம்<br>* சான்றுச்செய்யுள்<br>* அணி விளக்கம் | 5 |
| 45 | பூக்கட்டும் புதுமை என்னுந் தலைப்பில் அமைந்துள்ள கவிதை அழகு<br>* பாடல் அமைந்த பாவினம்<br>* எதுகை இன்பம்<br>* மோனை நயம்<br>* உவமை நயம்<br>* இனிமை பயக்கும் இயைபுத்தொடை<br>* ஓவியம்போல் ஒளிர்கிறது | 5 |
| | (அல்லது)<br>சிலுவைமிசை கண்ட இறைவனது பண்பாக எச். ஏ. கிருஷ்ணபிள்ளை கூறுவன<br>* தேவர்களுக்கெல்லாம் தேவனாய் இருப்பவர் இயேசு<br>* அவர் முடிவே இல்லாத இறைவர்<br>* புழைமையான திருமறை கூறும் பொருளாய் இருப்பவர்<br>* தம்மைவிட்டு நீங்காத சிறந்த பண்புகளைக் கொண்டவர்<br>* ஒருபயனும் எதிர்பாராது உதவுபவர்<br>* உலகில் உள்ள மக்கள் துன்பத்தால் அழிந்துவிடாதபடி காக்க மனிதவடிவம் கொண்டு விடாப்பிடியாய் முன்னின்று நடத்திக்காட்டுபவர் | 5 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 46 | **வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது**<br>* வேங்கையில் வீற்றிருந்த மயில்<br>* திருமணச்சடங்குகளுள் ஒன்றாகிய மணமகள் கூந்தலில் மலர்சூட்டுதல் மரபு.<br>* இந்நிகழ்வைக்கண்ட தோழி மகிழ்வுற்று தலைவனைப் பாராட்டி வாழ்த்தினாள்.<br>* தலைவனே, பலரும் அறிந்து மகிழும்படி இன்று தலைவிக்குத் திருமணம்கருதிப் பூச்சூட்டிச் சிறப்புச்செய்தாய்.<br>* ஆனால், தலைவியோடு தனியே பழகிய அன்றே நீ அவளுக்கு மலர்சூட்டி மகிழ்ந்தாய்.<br>அப்பொழுதே அவள் உன்னால் மணம்செய்யப்பட்டவள் போன்றே என் கண்ணுக்கு விருந்தாகிப் பொலிவு பெற்றாள். | 5 |
| | **(அல்லது)**<br>**"தண்ணீர் வங்கிகள் வேண்டும்" என ந. கருணாநிதி கூறக் காரணங்கள்**<br>* இயந்திரங்களால் நீரை உறிஞ்சிவிட்டோம்<br>* பசுமைப்புரட்சி செய்து வென்றோம்<br>* விலைகொடுத்துக் குடிநீரை வாங்குகிறோம்<br>* தண்ணீர் வங்கிகள் வேண்டும்<br>* மழைநீர் வீணாகாமல் தங்குமாறு வீட்டுத்தரை அமைத்தல்<br>* குளங்கள் ஏரிகள் பூமிக்குள் அமைத்துக் காத்தல் | 5 |
| 47 | **வைய மீன்றதொன்** மக்க ளுளத்தினைக்<br>கையி னாலுரை கால மிரிந்திடப்<br>பைய நாவைய சைத்த பழந்தமிழ்<br>ஐயை தாடலை கொண்டு பணிகுவாம். **–பள்ளியகரம் நீ. கந்தசாமிப்புலவர்**<br>**பாவகை: கலிவிருத்தம்.** | 4<br><br>1 |
| | **(அல்லது)**<br>**ஆதிமலை** யெங்களுக்கோ ஏதன்மலை யம்மே<br>ஆண்டவனார் எங்களைத்தாம் அமைத்தமலை யம்மே<br>நீதியென்ற நால்வரமுங் கொடுத்தமலை யம்மே<br>நித்தியமும் சாகாமல் நின்றமலை யம்மே<br>சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்தமலை யம்மே<br>தற்பரனர் எம்மையங்கே சபித்தமலை யம்மே<br>பேதகமாய் நாங்களதை விட்டதற்பின் னம்மே<br>பெத்தலகேம் எங்களுக்குப் பெரியமலை யம்மே<br>**-தஞ்சை வேதநாயக சாத்திரியர்**<br>**பாவகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்** | 4<br><br>1 |

www.Padasalai.Net



முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, தமிழாசிரியர்,
நாடார் மகமை மேனிலைப்பள்ளி,
ஏழாயிரம்பண்ணை – 626 201,
சாத்தூர்(வழி), விருதுநகர் மாவட்டம்.
WhatsApp 7806868246
வலைப்பூ: annaachi7k.blogspot.com
You Tube URL:
http://www.youtube.com/channel/UCivVm_zGT81aEKKMHWgFW-g



http://www.trbtnpsc.com/2018/03/11th-public-exam-march-2018-question-papers-and-answer-keys-download.html